JSAC

# JAFFNA SOCIAL ACTION CENTER
## யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு செயற்திட்டம்
## 2009




யாழ் சமூக செயற்பாட்டு மையம்

**18/1, கைலாசபிள்ளையார் கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**T.P: 021 222 3699**

e.mail:jsacjaffna@sltnet.lk

# சுற்றுச் சூழல் பாதிப்பு என்றால்?

மனிதன் இயற்கையை பாதுகாக்க தவறியதன் காரணமாக இன்று சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருகின்றது. மனிதனின் திட்டமிடப்படாத செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற தாக்கம் காரணமாக மனித வாழ்விடத்தில் ஏற்படுகின்ற அசாதாரண மாற்றம் ஆகும். அதாவது வளிமண்டலத்தில் உயிரினங்களுக்கு சாதகமாக காணப்படும் சிறப்பு அமைப்புக்கள். தூசி, காபனீரொட்சைட் அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளினால் மாற்றம் அடைதலாகும்.

இதனால் வளிமண்டலத்தில் தாக்கம் ஏற்பட்டு இன்று உலகம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளில் ஒன்றாக காலநிலை மாற்றம் உள்ளது. இந்த பாதகமான மாற்றத்தினால் வெள்ளப்பெருக்கு, பஞ்சம், வரட்சி இதன் மூலம் யுத்தம் உருவாகின்றது.

இதனால் மனிதன் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. எனவே சுற்றுச் சூழலை பாதுகாப்பது ஒவ்வொரு மானிடனின் கடமையாகும்.




JSAC

# சுற்றுச் சூழலில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

★ அதிக அளவான மின்சார பாவனை மற்றும் மின்சார அடுப்புக்கள் அதிகம் பயன்படுத்தப் படுகின்றமை போன்ற காரணத்தினாலும் வெப்பம் அதிகரிப்பதுடன் நோய்களும் ஏற் படுகின்றது.

★ காடுகள் அழிக்கப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படுகின்றது.அத்துடன் வெப்பம் அதிகரித்தல் வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவு கூடுதல்,மழை வீழ்ச்சி குறை-வடைதல்,இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைகின்றது.

★ வாகனங்களில் இருந்து வெளியிடப்படும் அதிகளவான புகை காரணமாக ஓசோன் படலம் பாதிப்படைவதால் வெப்பம் அதிகரிக்கின்றது.இதனால் நோய்களும் ஏற்படுகின்றது.
குழாய்க் கிணறுகள் அதிகமாக தோண்டப்படுவதால் நன்னீர் உவர் நீராக மாற்றம் அடைகின்றது. இதனால் எதிர்காலத்தில் நன்னீர் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் நன்னீரை தேடி இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

★ காபனீரொட்சைட்டு வளியுடன் அதிக அளவில் சேர்வதால் வளிமண்டலத்தில் வெப்ப நிலை அதிகரித்து பனிப்பாறைகள் உருகுவதால் கடலின் நீர் மட்டம் அதிகரிக்கின்றது.



★ திட்டமிடப்படாத முறையில் மலசலகூடக் குழிகள், கிணற்றுக்குழிகள் தோண்டப் படுவதால் கிணற்று நீருடன் மலசலகூட கழிவுநீர் சேர்வதால் நீர் மாசடைகின்றது.

★ பொலித்தீன், பிளாஸ்ரிக் என்பனவற்றினை மண்ணுக்குள் புதைக்கும் போது மழை நீரின் ஊடுருவல் இவற்றினால் தடுக்கப்படுகிறது.மற்றும் கிணறு,குளம் என்பவற்றில் பொலித்தீன் வீசப்படுவதால் நிலத்தடி நீரின் மீள் நிரப்புகை தடுக்கப்பட்டு கிணறுகளிலும் நிலத்தின் அடிகளிலும் நீர் வற்றுகின்றது. அத்துடன் இவை எரிக்கப்படுவதால் கந்தகவீர்ஒட்சைட் டும் நைதரசன் ஒட்சைட்டும் வெளியேறி வளிமண்டலத்தில் கலக்கும் நச்சுப்புகை சுவாச நோய்களை ஏற்படுத்தும்.





★ திட்டமிடப்படாத முறையில் கடற்கரைகளுக்கு அண்மித்ததாக அமைக்கப்படும் தொழிற் சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் நச்சுக் கழிவுகள் கடலில் கலப்பதால் உயிரினங்கள் அழிவதுடன் இவற்றில் இருந்து வெளியேற்றப்படும் புகைகளினாலும் வளிமண்டலம் மாசடைகின்றது. இச் செயற்பாடு பூமி வெப்பம் அடைவதற்கு காரணமாக அமைகின்றது.

★ அதிகளவான கிருமி நாசினி பாவனையால் வளி, நீர், நிலம் என்பன மாசடைவதுடன் மண்ணின் இயற்கை வளமும் பாதிப்படைகின்றது. அத்துடன் மண்ணை வளப்படுத்தும் பூச்சி புழுக்களும் அழிவடைகின்றன. 90 வீதமான நீர் நிலத்தடியில் இருந்தே பெறப்படுகின்றது.

★ குளிரூட்டி, குளிர்சாதன பெட்டிகளின் பாவனையால் அவற்றில் இருந்து வெளியேற்றப்படும் குளோரா புளோரா காபன் (CFC) நோய்களை ஏற்படுத்துகின்றது.

★ வீட்டுக் கழிவுகளும் ஏனைய கழிவுகளும் பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படாமை.





★ ரயர், ரியூப் என்பன எரிக்கப்படுவதால் கந்தகவீர் ஒட்சைட்டுக்கள் வெளியிடப்படுகின்றன. இதனால் வளிமண்டலத்தில் தாக்கம் ஏற்பட்டு அமில மழை பெய்கின்றது. இவ் அமில மழை நீரானது நீருடன் கலப்பதால் நிலத்தடி நீர் மாசடைகின்றது.

★ தொழிற்சாலைகள், வாகனம், அனல் மின் நிலையம் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும் பெற் றோல் மண்ணெண்ணை ஆகியன அதிகமாக பாவிக்கப்படுவதால் காபனீரொட்சைட் அதிமாக வெளியேற்றப்படுகின்றது.





★ டைனமற்றினை பாவித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுதல்.

# சுற்றுச் சூழலை பாதுகாக்க நாம் செய்ய வேண்டியது

❄ இயற்கை பசளை,இயற்கை கிருமிநாசினி போன்றவற்றை பயன்படுத்தி இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளல்.

❄ வீட்டுத் தோட்ட செயற்பாடுகளை இயற்கை பசளையை பாவித்து மேற்கொள்வதன் மூலம் நமக்கு தேவையான மரக்கறி வகைகளை நாமே உற்பத்தி செய்வதுடன் நஞ்சற்ற மரக்கறி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். இதனால் நம்முடைய உடல் ஆரோக் கியத்தினை நாமே தீர்மானித்துக்கொள்ளலாம்.





❄ மலசலகூட குழிகள் அமைக்கும்போது பொதுச் சுகாதார பரிசோதகரின்(PHI) ஆலோசனை பெற்று அமைக்க வேண்டும். அத்துடன் புதிய தொழில்நுட்பத்துடன் மலசலகூடத்தை அமைத்தல்.

❄ மரங்களை நடுவதன் மூலம் மழைவீழ்ச்சியைப் பெறுவதுடன் பசுமையை உருவாக்கி எமது இயற்கை வளத்தினை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம். எதிர்கால சந்ததியி- னரின் நலனைக் கருத்தில் கொண்டு மரங்களை பாதுகாக்க வேண்டும்.

❄ 625 சதுர அடி நிலப்பரப்பில் உள்ள மரங்கள் ஒரு மனிதனுக்கு அன்றாடம் தேவையான ஒட்சிசனை வழங்குகின்றது. எனவே அனுமதியற்ற முறையில் மரங்களை அழிப்பதை தடுத்தல் வேண்டும்.



❄ பொலித்தீன் பாவனையை குறைத்து துணியில் தைக்கப்பட்ட பையைப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் பொலித்தீன் பாவனை குறைக்கப்பட்டு சூழல் மாசடைவதை தடுக் கலாம்.

❄ தொழிற்சாலைகள் மற்றும் கட்டிடங்கள் அமைக்கும்போது சூழலுக்கு தீங்கு ஏற்படுத் துமா என ஆராய்ந்து சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெற்று அமைக்க வேண்டும்.

# நீரைப் பாதுகாக்க செய்ய வேண்டியது

நீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

❄ நீர் குழாயில் இருந்து நீரைப் பாத்திரத்தில் எடுத்துப் பயன்படுத்தவும்.

❄ நீரை எடுத்த பின் குழாய் இறுக்கமாக மூடப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

❄ விவசாய நிலங்களுக்கு காலை அல்லது மாலை நேரங்களில் நீரினை பாய்ச்சவும்.

❄ பயிர்களுக்கு தூவல் நீர் பாசன முறையில் நீரினை பாவிக்கவும்.





❄ நிலத்தடி நீரைப் பாதுகாக்க குளங்கள் புணரமைப்பு செயப்படல் வேண்டும்.

## கழிவுப்பொருட்களை மீள் சூழற்சி முறையில் பயன்படுத்தல்

❄ கழிவுகளை பயன்படுத்தி சேதன பசளையினை தயாரித்து விவசாய நிலங்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் செயற்கை பசளை பாவனைகளான யூரியா, அமோனியா ஆகியவற்றின் பாவனையை குறைக்கலாம். இதன் மூலம் விவசாய நிலத்தை பாதுகாக்கலாம்.




❄ பிளாஸ்ரிக் பொருட்களை மீள் சுழற்சி பாவனைக்குட்படுத்தலாம் அதாவது அலங் காரப் பொருட்களை தயாரிக்கலாம்.

# மின்சாரத்தினை சிக்கனப்படுத்த நாம் செய்ய வேண்டியது

❋ குறைந்த அழுத்தமுள்ள மின் குமிழ்களைப் பயன்படுத்தல்.





❋ தேவையற்ற நேரத்தில் மின்குமிழ்களை அணைத்து விடவும்.

❋ மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்துதல்.

❋ சோலர் மூலமான மின்சாரத்தினைப் பயன்படுத்துதல்.

❋ மின்சார அடுப்புக்களுக்குப் பதிலாக சூட்டடுப்புக்களை, ப்ரஷர் குக்கர்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

❋ குளிர்சாதனப் பெட்டியை தேவையான நேரத்தில் சிக்கனமாகப் பயன்படுத்தவும் அத்துடன் தேவையானபோது வாயு நிரப்புதல் வேண்டும்.



# சூழலை பாதுகாப்பதற்கு சமூகத்தின் பங்களிப்பு

- சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்துக் களை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும்.

- தேவையற்ற முறையில் மரங்கள் அழிக்கப்படுவதை தடுப்பதை ஒவ்வொரு மனிதனும் கடமையாக கொள்ள வேண்டும்.

- மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்க கூடியன. எனவே மக்களின் பங்களிப்புடன் இனம் காணப்பட்ட இடங்களில் சமூக காடுகளை உருவாக்க வேண்டும்.



- தொண்டடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் சூழலை பாதுகாக்க முன்வர வேண்டும்.

முக்கியமான தினங்கள்,வீடுகளில் நடைபெறும் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளை ஞாபகபடுத்தும் வகையில் மரங்களை நடுவோம்.
நாம் ஒவ்வொருவரும் சுற்றுச்சூழல் ஆர்வலராக மாறுவோம்.

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை**
**மக்களிடம் ஏற்படுத்த ஆர்வமுள்ள அனைவரும்**
**எம்மோடு இணைந்து செயற்படலாம்**

**“நாளைய சமூகத்தின் நல்வாழ்வு நமது கைகளில்”**

நிதி அனுசரனை- கிறிஸ்தவ உதவி நிறுவனம்

JSAC